# சட்டம், நீதி மற்றும் நிறுவன விவகார அமைச்சகம்
# (சட்டத்துறை)

புது டெல்லி, 30 டிசம்பர், 1999/ பவுசா 9,1921(சகா)

நாடாளுமன்றத்தினால் கொண்டுவரப்பட்ட இச்சட்டம் இந்திய ஜனாதிபதியின் ஒப்புதலை 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் தேதி பெற்றது. இங்கு பொதுமக்களுக்காக வெளியிடப்படுகிறது:-

**ஆட்டிசம் (மதியிறுக்கம்), மூளை இசிவு, மனநல வளர்ச்சியின்மை மற்றும் பன்மைக் குறைபாடுகள் சட்டம்,1999 ன் கீழ் குறைபாடு உள்ளவர்களின் நலம் பேணும் தேசிய அறக்கட்டளை**

எண்.44, 1999

(30 டிசம்பர்,1999) **ஆட்டிசம் (மதியிறுக்கம்), மூளை இசிவு, மனநல வளர்ச்சியின்மை மற்றும் பன்மைக் குறைபாடுகள்** உள்ள நபர்களின் நலனுக்காக தேசிய அளவில் ஓர் அமைப்பை உருவாக்க இயற்றப்பட்டச் சட்டம் இது .

- இந்தியாவின் 50 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு இந்தச் சட்டம் அமலானது.

CHAPTER I

அத்தியாயம் 1

துவக்கம்
PRELIMINARY

சுருக்கமான தலைப்பும் & விரிவும்

1.

(i)

இந்தச் சட்டத்தை **ஆட்டிசம் (மதியிறுக்கம்), மூளை இசிவு, மனநல வளர்ச்சியின்மை மற்றும் பன்மைக் குறைபாடுகள் சட்டம்,1999 ன் கீழ் குறைபாடு உள்ளவர்களின் நலம் பேணும் தேசிய அறக்கட்டளை யை உருவாக்கும் சட்டம் என அழைக்கலாம்**

(ii)

ஜம்மு&காஷ்மீர் தவிர இந்தச் சட்டம் இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும்.

2. இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்படும் சில முக்கிய வரையறைகள்

a)

ஆட்டிசம் என்பது மூளை தகவல்களை பயன்படுத்திப் புரிந்து கொள்ளும் திறனை தடுப்பது. மூளையின் முக்கிய செயல்பாடுகளாகிய பேச்சு திறன், சமுதாய தொடர்பு மற்றும் புலன் உணர்வு ஆகியவற்றை பாதிக்கும் நோய். பிறருடன் தகவல் தொடர்பினைத் தவிர்த்து மன இறுக்கத்துடன் தென்படுதல்.அத்துடன் திரும்பத் திரும்ப ஒரேவிதமான செயல்களைச் செய்துகொண்டிருப்பார்கள்.

b)

"போர்டு" என்பது பிரிவு 3 இன் கீழ் உருவாக்கப்பட்ட அறக்கட்டளை உறுப்பினர்கள் சேர்ந்த அமைப்பு;

c)

ஒரு குழந்தை கருப்பையில் இருக்கும்போதோ அல்லது சிசுவாக வளரும்போதோ அதன் மூளையில் ஏற்படும் காயங்கள் அல்லது பாதிப்பால் ஒருங்கிணைந்த செயல்பாடு மூளைக்கும் நரம்புமண்டலங்களுக்கும் இல்லாமல் போகும் நிலைதான் "மூளை இசிவு" எனப்படுகிறது.

d)

பிரிவு 3 இல் உட்பிரிவு(4)- அம்சம் (a) ன்படி போர்டின் "தலைவர்" தான் சேர்பெர்சனாக இருக்கிறார்.

e)

"சீஃப் எக்சிக்யூட்டிவ் ஆபிசர்" என்று கூறப்படுபவர் தலைமைச் செயல் அதிகாரியாக பிரவு 8 இன்கீழ் உட்பிரிவு(1) இன் கீழ் நியமிக்கப்படுபவர்.

f)

"உறுப்பினர்" என்பவர் போர்டின் உறுப்பினர். அதில் தலைவர் எனப்படும் சேர்பெர்சனும் இருப்பார்.

g)

"மூளை வளர்ச்சியின்மை" என்பது ஒரு நபரின் மூளை போதிய அளவு வளராமல் ஏற்படும் நிலையாகும். அந்த நபரின் புத்தி பிரத்யேகமாக மந்தத்தன்மையுடன் இருக்கும்.

h)

**பன்மைக் குறைபாடுகள் (மல்டிப்பிள் டிசெப்ளிட்டிஸ்) என்பது ஊனமுற்றோர் ( சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995(1996 இல் 1) பிரிவு 2 ல் (இ) ல் வரையறுக்கப்பட்ட இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட குறைபாடுகள் சேர்ந்து ஒரு நபரிடம் இருக்கும் தன்மையைக் குறிக்கும்**

i) அறிவிப்பு என்பது அரசிதழில் வெளியிடப்பட்டது என்பதைக் குறிப்பது

j) "குறைபாடு உள்ள நபர்" என்பது ஆட்டிசம், மூளை இசிவு, மூளை வளர்ச்சியின்மை அல்லது மேற்சொன்ன மூன்றில் இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட குறைபாடுகள் சேர்ந்து தீவிரமாக பாதித்த நபரைக் குறிப்படுவது.

k)
"பரிந்துரை" என்று குறிப்பிடுவது இந்தச் சட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட விதிகள்

l)
" தொழில் வல்லுநர்" என்று குறிப்பிடுவது குறைபாடுள்ள நபர்களுக்கு சேவை செய்யும் பிரத்யேகப் பயிற்சி பெற்ற நபர்கள்.

m) "பதிவுபெற்ற அமைப்பு" என்பது பிரிவு 12 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட குறைபாடு உள்ள நபர்களின் அமைப்பு அல்லது குறைபாடுள்ள நபர்களின் பெற்றோர்கள் அமைப்பு அல்லது தன்னார்வ அமைப்பு..;

n) விதிமுறைகள் என்பது இச்சட்டத்தின் கீழ் போர்டால் உருவாக்கப்பட்டது;

o) " தீவிர குறைபாடு" என்பது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பலகுறைபாடுகளில் 80 சதவிகிதம் அல்லது அதற்கு மேல் குறைபாடு கொண்டிருத்தல்

p) "ட்ரஸ்ட்" என்பது **பிரிவு 3 உட்பிரிவு (1)- ன் கீழ் உருவாக்கப்பட்ட** ஆட்டிசம், மூளை இசிவு, மூளை வளர்ச்சியின்மை மற்றும் பல குறைபாடுகள் பாதித்தோருக்கான தேசிய நல அறக்கட்டளையைக் குறிப்பது

**CHAPTER II**

**அத்தியாயம் II**

THE NATIONAL TRUST FOR WELFARE OF PERSONS WITH AUTISM, CEREBRAL PALSY, MENTAL RETARDATION AND MULTIPLE DISABILITY

ஆட்டிசம், மூளை இசிவு, மூளை வளர்ச்சியின்மை மற்றும் பல குறைபாடுகள் பாதித்தோருக்கான தேசிய நல அறக்கட்டளை

3. Constitution of the National Trust for Welfare of Persons with Autism, Cerebral Palsy, Mental Retardation and Multiple Disability, etc. –

3. ஆட்டிசம், மூளை இசிவு, மூளை வளர்ச்சியின்மை மற்றும் பல குறைபாடுகள் பாதித்தோருக்கான தேசிய நல அறக்கட்டளை **உருவாக்கம்** குறித்து.....

1. **மத்திய அரசின் அரசிதழ் அறிவிப்பின்படி,அறிவிக்கப்பட்ட தேதியில் இருந்து இசட்டத்தின் தேவைகளை முன்னிட்டு ஆட்டிசம், மூளை இசிவு, மூளை வளர்ச்சியின்மை மற்றும் பல குறைபாடுகள் பாதித்தோருக்கான தேசிய நல அறக்கட்டளை என்று ஓர் அமைப்பை உருவாக்கலாம்**. இந்தப் பெயரில் குறிப்பிட்டிருப்பது போன்றே அதன் பணிகள் இருக்கும். அத்துடன் பொது முத்திரையும், அதிகாரங்களும் உண்டு. ஒரு சொத்தை(அசையும் சொத்து அல்லது அசையா சொத்து) வாங்கவோ, அனுபவிக்கவோ, விற்கவோ உரிமை உண்டு. அத்துடன் ஒப்பந்தம் செய்யவும் உரிமை உண்டு. அத்துடன் இந்த அமைப்பு எந்தக் காரணத்தை முன்னிட்டும் வழக்கு தொடுக்கலாம். இந்த அமைப்பின் மீதும் வழக்கு போடவும் சுதந்திரம் உண்டு.

2.

பொது மேற்பார்வை, இயக்கம் , விவகார மேலாண்மை மற்றும் அறக்கட்டளையின் அனைத்து பணிகளும் அதிகாரமும் போர்டைச் சார்ந்தது.

3.

அறக்கட்டளையின் தலைமை அலுவலகம் புதுடெல்லியில் இருக்கலாம். மத்திய அரசிடம் முன்கூட்டியே அனுமதி வாங்கி இந்தியாவின் பிற பகுதிகளில் அலுவலகங்களை ஏற்படுத்தலாம்.

4.

போர்டின் அமைப்பு

a)

மத்திய அரசால் நியமிக்கப்படும் தலைவர், ஆட்டிசம், மூளை இசிவு, மூளைக்குறைபாடு மற்றும் பலகுறைபாடுகள் துறையில் அனுபவமும்

நிபுணத்துவமும் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
b)
வரையரைகள் மற்றும் வழிமுறைகளுக்கு உட்பட்டு ஒன்பது நபர்கள் பதிவுபெற்ற நிறுவனங்களிலிருந்து பரிந்துரைக்கப்பட வேண்டும். அவர்களுள் ஒருவர் தன்னார்வ நிறுவனத்திலிருந்தும், ஒருவர் ஆட்டிசம், மூளை,இசிவு, மூளைக்குறைபாடு மற்றும் பல்குறைபாடுகளால் பாதிக்கப்பட்டவர்களின் பெற்றோர்கள் அமைப்பிலிருந்தும், ஒருவர்  இக்குறைபாடுகள் உடைய அமைப்பின் உறுப்பினர்களிலிருந்தும் பரிந்துரைக்கப்பட வேண்டும். இந்த அம்சத்தின்கீழ் ஆரம்ப நியமனத்தை மத்திய அரசே பரிந்துரைக்கலாம்.
c)
இந்திய அரசின் கூடுதல் செயலர் நிலைக்கு குறையாத தகுதியுடையவர்களாக இருக்கும் எட்டு நபர்கள் இந்திய அரசால் நியமிக்கப்படும் பிரதிநிதிகள் ஆவர். அவர்கள் சமூகநீதி மற்றும் சுயமேம்பாட்டு அமைச்சகம்,பெண்கள் மற்றும் குழந்தை வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலம், நிதி, தொழிலாளர், கல்வி, நகர்புற விவகாரம் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்புத் துறைகளின் உறுப்பினர்கள், முன்னாள் அதிகாரிகள்;
d)
மனிதாபிமான சேவைகளில் ஈடுபட்டிருக்கும் வியாபாரம், வர்த்தகம் மற்றும் தொழிற்துறை நிறுவனங்களின் கூட்டமைப்பிலிருந்து போர்டால் 3 பேர் நியமிக்கப்பட வேண்டும்.
e)
தலைமைச் செயல் அதிகாரியாக நியமிக்கப்படுபவர் இந்திய அரசின் கூடுதல் செயலர், உறுப்பினர்-செயலர், முன்னாள் அதிகாரியாக இருக்கலாம்.

அறக்கட்டளையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளின்படி, குறிப்பிட்ட தேவைகளின் கீழ் எந்த நபரின் உதவி அல்லது ஆலோசனையையும் நாடும் அதிகாரம் போர்டுக்கு உண்டு: தேவையான சந்தர்ப்பத்தில் அந்த நப**ருக்கு**, கலந்தாலோசனைக் கூட்டங்களில் பங்குபெறும் உரிமை உண்டு. ஆனால் போர்டு கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமை அவருக்கு இல்லை. எந்தக் காரணத்துக்காகவும் அவர் போர்டு உறுப்பினராகவும் இருக்க முடியாது. அவ்வாறு நாடப்படும் நபர்களின் எண்ணிக்கை 8ஐத் தாண்டக்கூடாது. அந்த நபர்கள் பதிவுபெற்ற நிறுவனங்கள் அல்லது அத்துறைகளில்

வல்லுனர்களாக இருத்தல் வேண்டும்.

4.
தலைவர் மற்றும் உறுப்பினர்கள், போர்டு கூட்டம் ஆகியவற்றுக்கான பதவிக்கால வரம்புகள் (Term of office of Chairperson and Members, meeting of Board, etc. -)

1. ஒரு தலைவரோ அல்லது உறுப்பினரோ தான் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் வரை பதவியில் இருக்கலாம் அல்லது அடுத்து அந்தப் பதவியை ஏற்பவர் வரும்வரையோ இருக்கலாம்.
தலைவரோ, பிற உறுப்பினர்களோ 65 வயதுக்கு மேல் பதவியில் இருக்கக்கூடாது.

2.
தலைவர் மற்றும் பிற உறுப்பினர்களின் பணி நிபந்தனைகள் வரைமுறைகளுக்கு உட்பட்டவை.

3.
பிரிவு 3 இன் கீழ் உள்ள அம்சங்களின் படி போர்டில் தற்செயலாக காலியாகும் பணியிடத்தை நிரப்பலாம். அப்பணியிடத்திற்கு உரிய கால கட்டத்தில் எஞ்சியுள்ள காலம் வரை மட்டுமே அவர் அப்பதவியில் இருக்க முடியும்.

4.
தலைவராகவோ, உறுப்பினராகவோ எந்த நபரையும் நியமிப்பதற்கு முன்பு, அந்த நபருக்கு பொருளாதார ரீதியாகவோ பிற நலன்களை முன்வைத்தோ தனது வேலைகளில் விருப்பு வெறுப்புகளுடன் இருக்கமாட்டார் என்று மத்திய அரசு முழுமையாக ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்.

5.அறக்கட்டளையின் பயன்களை போர்டு உறுப்பினர் யாரும் அவரது பணிக்காலத்தில் அனுபவிப்பவராக இருத்தல் கூடாது.

6.

மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது போர்டு உறுப்பினர்கள் சந்தித்து ஆலோசனை செய்யவேண்டும். அதற்கான காலத்தையும் இடத்தையும் விதிமுறைகளின் அடிப்படையில் போர்டு தான் முடிவுசெய்ய வேண்டும்.

7.

போர்டின் தலைவர் ஏதாவது காரணத்தை முன்னிட்டு கூட்டத்தில் பங்கேற்க முடியாவிட்டால், உறுப்பினர்களுக்குள்ளேயே ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவரின் தலைமையில் கூட்டம் நடத்தலாம்.

8.

போர்டு கூட்டத்தில் எடுக்கும் முடிவுகளுக்கு அக்கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்களில் பெரும்பாலானவர்களின் வாக்கு அவசியமானது. வாக்குகள் சம அளவு இருக்கும் சூழ்நிலையில் தலைவரோ அவருக்கு பதிலாக உள்ள பிரதிநிதியோ இன்னொரு முறை வாக்களிக்கலாம்.

5.

தலைவர் மற்றும் உறுப்பினர்களின் ராஜினாமா(Resignation of Chairperson and Members -)

(1)

மத்திய அரசுக்கு முகவரியிட்டு தலைவர் தனது கைப்பட கடிதம் எழுதவேண்டும். மத்திய அரசால் பதவிக்கான அடுத்த நபர் நியமிக்கப்படும் வரை இவரே அலுவலகத்தில் தொடரவேண்டும்.

2)

உறுப்பினர் என்பவர் தலைவருக்கு தனது கைப்பட கடிதம் எழுதி விலகிக்கொள்ளலாம்.

6.

தகுதி இழப்பு- கீழ்க்கண்டவற்றால் ஒரு நபர் உறுப்பினர் தகுதியிலிருந்து இழக்க நேரிடும்(Disqualifications -No person shall be a Member if he -)

(a) உறுப்பினராக இருப்பவர் மனநிலை சரி இல்லாமல் போனாலோ அப்படியாக நீதிமன்றம் அறிவித்தாலோ

(b) ஒரு குற்றத்தில் தண்டிக்கப்பட்டிருந்தாலோ அல்லது மத்திய அரசின் கருத்துப்படி தார்மீகம் குலையும் செயலில் ஈடுபட்டிருந்தாலோ

c) தீர்ப்பின்படி திவாலானவர் என்று அவர் அறிவிக்கப்பட்டிருந்தாலோ.

7.
உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகுதல் தொடர்பாக (Vacation of office by Member -If a member-)
(a)
ஆறாவது பிரிவின் கீழ் சொல்லப்பட்டுள்ள ஏதாவது தகுதியின்மைகளுக்கு ஆளாகியிருந்தாலோ

b) முன்கூட்டியே தகவல் சொல்லாமல் தொடர்ந்து மூன்று போர்டு கூட்டங்களுக்கு வராமல் இருந்தாலோ

(அல்லது)

5 ஆவது பிரிவின் கீழ் ராஜினாமா கடிதம் தந்திருந்தாலோ, அவரது இடம் காலியாகவே இருக்கும்.

8.

தலைமை செயல் அதிகாரி மற்றும் அறக்கட்டையின் ஊழியர்கள்(Chief Executive Officer and Staff of Trust)-

1. போர்டின் விதிமுறைகளின்படியோ, தலைவரின் ஆணைப்படியோ அதிகாரம் செலுத்துவதற்கும் சில கடமைகளைப் புரிவதற்கும் தலைமைச் செயல் அதிகாரி ஒருவரை மத்திய அரசு நியமிக்கலாம். 2. தேவைப்படின் , அறக்கட்டளையின் நோக்கங்களை நிறைவேற்ற மத்திய அரசின் முன் அனுமதியுடன் பிற அதிகாரிகள் மற்றும் ஊழியர்களை போர்டு நியமிக்கலாம்.

அறக்கட்டளையின் தலைமைச் செயல் அதிகாரி, பிற அதிகாரிகள் மற்றும் அறக்கட்டளையின் ஊழியர்களின் பணிநிபந்தனைகள் மற்றும் சம்பளங்கள், படிகள் விதிமுறைகளின் படி நிர்ணயிக்கப்படலாம்.

3.

போர்டின் காலிப்பணியிடங்கள் அதன் சட்டத்தைப் பாதிக்காது (Vacancies in Board not to invalidate acts, etc.) – போர்டில் ஏதேனும் காலிப்பணியிடம் இருப்பின், அதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு போர்டின் சட்டம்/நடவடிக்கைகள் செல்லாது எனக் கூறவோ, கேள்வி கேட்கவோ முடியாது.

## அத்தியாயம் III

## அறக்கட்டளையின் நோக்கங்கள்(OBJECTS OF THE TRUST)

அறக்கட்டளையின் நோக்கங்களாவன -

ஏ) உடல் ஊனமுற்றவர்கள் சுயமேம்பாட்டை அடைந்து பிறர் உதவியின்றி தனித்துவமாகவும் தங்கள் உற்றார் உறவினருடன் சகவாழ்வு வாழவும் வழிவகுப்பது.

பி) உடல் ஊனமுற்றவர்கள் தங்கள் குடும்பத்தினருடனேயே வாழ்வதற்கான உதவிகளை அவர்களுக்குச் செய்வது;

சி) ஊனமுற்ற நபர்களின் குடும்பங்கள் நெருக்கடிகளைச் சந்திக்கும் காலங்களில் தேவை அடிப்படையிலான சேவைகளைச் செய்வதற்கு பதிவுபெற்ற நிறுவனங்களுக்கு உதவியை நீட்டித்தல்

டி) குடும்பத்தின் துணை இல்லாத ஊனமுற்ற நபர்களின் பிரச்னைகளுக்குத் துணைபுரிய

இ) ஊனமுற்ற நபர்களின் பெற்றோர்களோ, பாதுகாவலர்களோ இறக்க நேரிடும்போது அவர்களின் பாதுகாப்பு மற்றும் நலத்துக்கான நடவடிக்கைகளை எடுக்க;

எப்) ஊனமுற்ற நபரின் குறிப்பிட்ட பாதுகாப்புக்காக காவலர்களையும், பாதுகாப்பாளர்களையும் நியமிப்பதற்கான நடைமுறையை உருவாக்குவது.

ஜி) ஊனமுற்ற நபர்கள் சமவாய்ப்புகளைப் பெறுவதற்கும், உரிமைப் பாதுகாப்பு மற்றும் முழுப்பங்கேற்பைப் பெறுவதற்குமான வசதிகளைச் செய்வது

எச்) மேற்கண்ட சூழல்களில் ஊனமுற்றோர் நலனை முன்னிட்டு செய்யப்படும் எந்த செயலும்

## CHAPTER IV

## அத்தியாயம் IV

## போர்டின் அதிகாரம் மற்றும் பணிகள்(POWERS AND DUTIES OF THE BOARD)

11.

(1) அமைப்பானது

(ஏ)

மத்திய அரசிடமிருந்து ஒரு தவணை பங்களிப்பாக நூறு கோடிரூபாய் நிதியைப் பெற்று, நிலையான நிதியாக வைக்கும். அதிலிருந்து வரும்

வருவாய் ஊனமுற்ற நபர்களின் வாழ்க்கையை மேம்படுத்த உதவும்.
(பி) அறக்கட்டளையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவோ, ஊனமுற்றோர் நலச்செ யல்பாடுகளுக்காகவோ, அசையும் சொத்துகளை கொடையாக வாங்கினால் பொதுவாக ஊனமுற்ற நபர்களின் நலனுக்காகவும் அறக்கட்டளையின் நோக்கங்களுக்காகவும் பயன்படுத்துவது அவசியமாகும்.

கொடையளிப்பவரின் விருப்புறுதிப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பயனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை அறக்கட்டளை உயர்த்தலாம். ஒரு குறிப்பிட்ட தேவைக்காகக் கொடுக்கப்பட்ட சொத்தையும் அந்தத் தேவையை முன்னிட்டு அறக்கட்டளை பயன்படுத்தலாம். கொடையாளியின் விருப்புறுதிப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளபடி கொடையளிக்கப்பட்ட அத்தனை தொகையையும் பத்திரத்தில் குறிப்பிட்டவர்களின் நலனுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று அறக்கட்டளையை நிர்ப்பந்திக்க முடியாது.

(சி)
ஒவ்வொரு நிதி ஆண்டும் மத்திய அரசிலிருந்து பெறப்படும் உதவித் தொகைகளை, பதிவுபெற்ற நிறுவனங்க ளுக்கு ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்காக கொடுக்கலாம்.
2. (1) ன் உப பிரிவின் தேவைகளுக்கேற்ப "அங்கீரிக்கப்பட்ட திட்டம்" என்பது-

a) ஊனமுற்ற நபர்கள், தங்கள் சமூகத்துக்குள்ளேயே தனித்துவமான வாழ்க்கையை வாழ உதவிசெய்யும் எந்தத் திட்டமும்-

i.சமூகத்துக்குள்ளேயே சௌகரியமான சூழலை உருவாக்குவது;
ii.ஊனமுற்ற நபர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆலோசனையும் பயிற்சியும் கொடுப்பது;
iii. வயதுவந்தோர் பயிற்சி யூனிட்கள், தனிப்பட்ட வகையிலும் குழுவாக வசிக்கவும் இல்லங்களை உருவாக்குதல்;
bbbbb) ஊனமுற்ற நபர்களின் ஓய்வுக்கால கவனிப்பு , அவர்களின் குடும்பத்தைத் தத்தெடுத்து கவனித்தல் மற்றும் தினசரி பராமரிப்பு சேவைகளை ஊக்குவிக்கும் திட்டங்கள்
b c) ஊனமுற்ற நபர்களுக்கான வளர்ப்பு மற்றும் பராமரிப்பு மையங்களை ஏற்படுத்துபவர்களுக்கு ஊக்கமளிப்பு

d) ஊனமுற்ற நபர்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுப்பதற்கு சுய உதவிக்குழுக்களை அவர்களிடையே உருவாக்குதல்

e) ஊனமுற்ற நபர்களைப் பாதுகாக்க உள்ளூர் கமிட்டி ஒன்றை உருவாக்கி பாதுகாவலராக்குதல்

f) மேற்கண்ட திட்டங்களைப் போல அறக்கட்டளையின் நோக்கங்களை நிறைவேற்றும் எந்தத் திட்டமும்.

(3) (2) ஆவது உப பிரிவின் அம்சம் (c)யின் நோக்கங்களுக்கு நிதி ஒதுக்கும் பொழுது ஊனமுற்ற பெண்களுக்கு அல்லது ஊனமுற்ற நபர்களில் தீவிர குறைபாடு இருப்பவர்களுக்கு அல்லது மூத்த குடிமக்களுக்கு முன்னுரிமை தருதல்.

**விளக்கம்** – இந்த உப பிரிவின் தேவைகளுக்காக,

(a)

"தீவிர குறைபாடுடைய நபர்கள்" என்பது ஊனமுற்ற நபர்கள் (சமவாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுபங்கேற்பு) சட்டம், 1995(1996ல் 1)உப பிரிவு (4), பிரிவு 56 ல் குறிப்பிடப்பட்டது போன்று.

(b) "மூத்த குடிமக்கள் என்பது 65 வயது அல்லது அதற்கு மேற்பட்ட நபரைக் குறிப்பது.

CHAPTER V

அத்தியாயம் **V**

12.

**பதிவுசெய்தலுக்கான செயல்முறைகள்** - (procedure for registration)

(1)

ஊனமுற்ற நபர்களின் நலத்தை உயர்த்தும் நோக்கத்தைப் பிரதானமாகக் கொண்ட எந்த தன்னார்வ நிறுவனமும், ஊனமுற்ற நபர்களின் அமைப்பும், ஊனமுற்ற நபர்களின் பெற்றோர்கள் அமைப்பும் **பதிவுசெய்து கொள்ள போர்டுக்கு விண்ணப்பிக்கலாம்**.

(2) போர்டு சொல்லும் நிபந்தனைகளுக்கேற்ப விண்ணப்பம் குறிப்பிட்ட

வடிவிலும், சரியான முறையிலும் இருத்தல் அவசியம். குறிப்பிட்ட தகவல்களுக்கு உதவியாக குறிப்பிட்ட ஆவணங்களும், குறிப்பிட்ட கட்டணங்களும் விதிமுறைகளில் குறிப்பிட்டிருப்பது போல சேர்க்கப்பட வேண்டியது அவசியம்.

(3) அந்த விண்ணப்பத்தை போர்டு பெற்றுக்கொள்ளும் போது அந்த விண்ணப்பத்தின் பொருத்தம், நேர்மை மற்றும் உண்மைத்தன்மையையும் கொடுக்கப்பட்ட விவரங்களையும் போர்டு விசாரிக்கலாம்.

(4)விண்ணப்பத்தை வாங்கியபிறகு போர்டு அதற்கு பதிவு அங்கீகாரத்தை வழங்கலாம். இல்லையெனில் அந்த விண்ணப்பத்தை சில காரணங்களை எழுத்துமூலம் கூறி நிராகரிக்கலாம். ஒரு விண்ணப்பதாரரின் விண்ணப்பம் மறுக்கப்பட்டால், அந்த விண்ணப்பதாரர் தனது விண்ணப்பத்தில் உள்ள குறைபாடுகளைச் சரிசெய்து(அப்படி இருந்தால்) மீண்டும் விண்ணப்பிக்கலாம்.

அத்தியாயம் vi

உள்ளூர் கமிட்டி

13. உள்ளூர் கமிட்டிகளை உருவாக்குதல்

(1) உள்ளூர் அளவிலான கமிட்டியை போர்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் உருவாக்கலாம்.

(2) ஒரு உள்ளூர் கமிட்டியின் அமைப்பு இவ்வாறாக இருக்கலாம்-

(ஏ) மத்திய அரசிலோ மாநில அரசிலோ பணியாற்றும் ஒரு குடிமைப்பணி அதிகாரி, மாவட்ட மாஜிஸ்ட்ரேட் அல்லது மாவட்ட

ஆணையருக்கு குறைவான பதவியில் உள்ளவராக இருத்தல் கூடாது.

(பி) ஒரு பதிவுபெற்ற நிறுவனத்தின் பிரதிநிதி.

(சி)

1.பிரிவு 2 இன் கீழ் (f) உட்பிரிவில் குறிப்பிட்டபடி ஊனமுற்ற நபர் என்பது ஊனமுற்ற நபர்கள் (சமவாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுபங்கேற்பு) சட்டம், 1995(1996ல் 1) ஆல் வரையறுக்கப்படுகிறது.

3. உள்ளூர் கமிட்டி என்பது அது அமைக்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று ஆண்டுகள் பணியைத் தொடரலாம் அல்லது போர்டால் மறு கமிட்டி அமைக்கப்படும் வரை முந்தைய கமிட்டியே பணியைத் தொடரலாம்.

4.மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது இந்த உள்ளூர் கமிட்டி தங்கள் கூட்டத்தை நடத்தவேண்டும் அல்லது தேவையான **கால** இடைவெளிகளில் நடத்தலாம்.

14.

பாதுகாவலரை நியமிப்பது-

(1)

ஊனமுற்ற நபரின் பெற்றோர் அல்லது ஊனமுற்ற நபரின் உறவினர் உள்ளூர் கமிட்டிக்கு விண்ணப்பித்து ஊனமுற்ற நபர்களுக்கு யாரை பாதுகாவலராக நியமிக்கலாம் என்ற தனது விருப்பத்தைச் சொல்லலாம்.

(2) எந்த பதிவுபெற்ற அமைப்பும் குறிப்பிட்ட வடிவில் உள்ளூர் கமிட்டிக்கு விண்ணப்பம் கொடுத்து ஒருவரை பாதுகாவலராக நியமிக்கக் கோரலாம். அதே சமயம் ஊனமுற்ற நபர்களுக்கான பாதுகாவலரின் ஒப்புதல் இல்லாமல் உள்ளூர் கமிட்டியால் இதுபோன்ற எந்த விண்ணப்பமும் அனுமதிக்கப்படக்கூடாது.

(3)

பாதுகாவலரை நியமிக்கும் விண்ணப்பத்தைப் பொறுத்தவரையில், உள்ளூர் கமிட்டி கீழ்க்கண்டவற்றை பரிசீலிக்கலாம்-

ஊனமுற்ற நபருக்கு பாதுகாவலர் அவசியமா என்பதையும், எந்தெந்த தேவைகளுக்காக ஊனமுற்ற நபருக்கு பாதுகாவலர் தேவை என்பதையும் பரிசீலிக்க வேண்டும்.

4. உபபிரிவு(1) , (2) இன்கீழ் உள்ளூர் கமிட்டி, விண்ணப்பங்களைப் பெற்று, ஆய்வுசெய்து விதிமுறைகளின்படி இருக்கிறதா என்பதைப் பரிசீலித்து முடிவு எடுக்கலாம்.

பாதுகாவலர் நியமனத்தைப் பொருத்தவரையில் உள்ளூர் கமிட்டி சொல்லும் உறுதிமொழிகளை பாதுகாவலர்கள் நிச்சயம் செய்யவேண்டும்.

(5)

உள்ளூர் கமிட்டி தான் பெற்ற விண்ணப்பங்களின் விவரங்களை போர்டுக்கு அனுப்பி குறிப்பிட்ட இடைவெளியில் விதிமுறைகள் நிர்ணயித்தபடி உத்தரவுகளைப் பெற்று அனுப்பலாம்.

15.

பாதுகாவலரின் கடமைகள்-

ஊனமுற்ற நபரின் பாதுகாவலராக நியமிக்கப்படும் எந்த நபரும், தேவைப்படும் நேரத்தில் ஊனமுற்ற நபர்களைப் பார்த்துக்கொள்ளவோ, அவர்களின் சொத்துகளைக் கவனிக்கவோ வேண்டும். அவர்கள் தான் ஊனமுற்ற நபர்களின் பராமரிப்புக்குப் பொறுப்பாவார்.

16.

**பாதுகாவலரின் பொறுப்பில் சொத்து விவரம் மற்றும் ஆண்டு கணக்கு**

(1)

**பிரிவு 14 ன் கீழ்** பாதுகாவலராக நியமிக்கப்பட்டவர்கள், நியமிக்கப்பட்டு 6 மாதங்களுக்குள் தன்னை நியமித்த அமைப்பிடம் ஊனமுற்ற நபரின் அசையாத சொத்துகள் மற்றும் ஊனமுற்ற நபர் பெற்றுக்கொண்ட பிற அசையும் சொத்துகள் விவரத்தைக் காண்பிக்க வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட ஊனமுற்ற நபருக்கு வரவேண்டிய பணம், சொத்துக்கள் விவரத்தையும் கடன்பாக்கி மற்றும் நிறைவேற்ற வேண்டிய நிதிப்பொறுப்புகளையும் அறிக்கையாகத் தரவேண்டும்.

(2)

ஒவ்வொரு நிதி ஆண்டின் முடிவிலும் கடைசி மூன்று மாதங்களில் ஒவ்வொரு பாதுகாவலரும் தனது பொறுப்பில் உள்ள சொத்துகள் மற்றும் உடைமைகளின் கணக்கையும், வரவுத்தொகை மற்றும் செலவழிக்கப்பட்ட தொகைக் கணக்கையும் குறிப்பிட்டு மிச்சமிருக்கும் பணம் பற்றிய விவரத்தையும் தரவேண்டும்.

17.

பாதுகாவலரை அகற்றுவது-

(1)

ஊனமுற்ற நபரின் உறவினரோ அல்லது பெற்றோரோ பாதுகாவலரை நியமித்த பதிவுபெற்ற அமைப்போ –

ஏ) ஊனமுற்ற நபரை பாதுகாவலர் துன்புறுத்துவதாகவோ, புறக்கணிப்பதாகவோ கருதினால்;

அல்லது

பி)ஊனமுற்ற நபரின் சொத்தை பாதுகாவலர் தவறாகப் பயன்படுத்தினாலோ, பராமரிக்காமல் இருந்தாலோ கமிட்டியிடம் விண்ணப்பித்து விதிமுறைகளின் படி பாதுகாவலரை நீக்க கோரலாம்.

(2) அப்படியாக கோரும் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருப்பது போல அவரை நீக்குவதற்காக எழுதப்பட்டிருந்த காரணம் கமிட்டிக்குத் திருப்தியை தந்தோலோ பாதுகாவலரை நீக்கி புதிய பாதுகாவலரை நியமிக்கலாம். ஊனமுற்ற நபரின் பாதுகாப்புக்கும் சேவைக்கும் சரியான நபர்கள் உடனடியாகக் கிடைக்காவிட்டால் அதற்குரிய மாற்று ஏற்பாடுகளையும் கமிட்டி செய்யவேண்டும்.

(3) உட்பிரிவு (2) இன்கீழ் ஒரு நபர் தனது பொறுப்பிலிருந்து நீக்கப்படும்போது, ஊனமுற்ற நபர்களின் சொத்துகளுக்கு தான் வகித்த பொறுப்பையும் புதிய பாதுகாவலரிடம் ஒப்படைக்க வேண்டும். அத்துடன் வசூலிக்கப்பட்ட பணம், கொடுக்கப்பட்ட பணம் தொடர்பான விவரங்களையும் கொடுத்துவிட வேண்டும்.

விளக்கம்- இந்த அத்தியாயத்தின் தேவைக்காக 'உறவினர்' என்ற சொல் ஊனமுற்ற நபரின் ரத்த,திருமண அல்லது தத்து உறவாக இருக்கலாம்.

CHAPTER VII

**அத்தியாயம் vii**

பொறுப்பேற்பு மற்றும் கண்காணிப்பு(accountability and monitoring)

18.

பதில் சொல்லும் கடமை-

(1)

போர்டிடம் இருக்கும் ஆவணங்கள் மற்றும் குறிப்புகள் அனைத்தையும் பதிவுபெற்ற எந்த நிறுவனமும் ஆய்வுசெய்யலாம்.

(2)

போர்டால் பராமரிக்கப்படும் எந்த குறிப்பு அல்லது ஆவணத்தின் நகலையும் போர்டுக்கு எழுத்து மூலம் கோரி எந்தப் பதிவுபெற்ற நிறுவனமும் பெறலாம்.

(3)

ஒரு பதிவுபெற்ற நிறுவனம் கேட்கும் குறிப்பு அல்லது ஆவணத்தைக் கொடுக்கத் தேவையான விதிமுறைக **ளை** போர் டு வகுத்துக் கொள்ளலாம்.

19.

கண்காணிப்பு-

நிதி உதவிக்காக விண்ணப்பித்த பதிவுபெற்ற நிறுவனங்களின் பழைய நிலைமைகளை ஆய்வுசெய்து விதிமுறைகளின்படி போர் டு தீர்மானிக்கலாம். அந்த குறிப்பிட்ட விதிமுறைகள் பதிவுபெற்ற நிறுவனங்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்கும்,மதிப்பிடும் வழிமுறைகளையும் தரலாம்.

20.

ஆண்டிறுதி பொதுக் கூட்டம்-

(1)

பதிவுபெற்ற நிறுவனங்களின் பொதுக் கூட்டத்தை ஒவ்வொரு ஆண்டும் போர் டு நடத்தும். ஒரு ஆண்டுக் கூட்டத் தேதிக்கும் மறு ஆண்டுக் கூட்டத் தேதிக்கும் நடுவே ஆறுமாதங்களுக்கு மேல் கால இடைவெளி ஆகியிருக்கக் கூடாது,

2.) முந்தைய ஆண்டின் வரவுசெலவு அறிக்கை மற்றும் அவ்வாண்டின் நடவடிக்கைகள் பற்றிய தகவல்களையும் இணைத்து ஆண்டிறுதிக் கூட்டம் குறித்த அறிவிப்பை பதிவுபெற்ற ஒவ்வொரு அமைப்புக்கும் விதிமுறைகளுக்கேற்ப அனுப்பவேண்டும்.

3.) விதிமுறைகளுக்கேற்ப பதிவுபெற்ற நிறுவனத்திலிருந்து பிரதிநிதிகளாக வரும் நபர்களின் எண்ணிக்கை முடிவுசெய்யப்படலாம்.

CHAPTER VIII

## அத்தியாயம் viii

## நிதி, கணக்குகள் மற்றும் தணிக்கை

FINANCE, ACCOUNTS AND AUDIT

21.

மத்திய அரசால் வழங்கப்படும் நிதி நல்கைகளைப் பொறுத்தவரையில், நாடாளுமன்றத்தில் சட்டத்தீர்மானம் நிறைவேற்றிய பிறகு அறக்கட்டளைக்கு ஒரு தவணையாக வைப்புநிதியாக நூறு கோடி ரூபாயைக் **கொடுக்கும்**. இச்சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்ற இந்த நிதியிலிருந்து வரும் வருமானத்திலிருந்து எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

22. நிதி

(1)

ஆட்டிசம், மூளை இசிவு, மூளைக்குறைபாடு மற்றும் பன்மைக்குறைபாடுகள் பாதிக்கப்பட்ட நபர்கள் நல தேசிய நிதி**யம் ஒன்றை** உருவாக்கலாம்.

(a) மத்திய அரசிலிருந்து பெறப்படும் அனைத்துப் பணமும்;

(b) நிதிநல்கை,பரிசுகள்,நன்கொடைகள்,உயில்கள் மற்றும் பணமாற்று வழியாக அறக்கட்டளை பெறும் அனைத்துப் பணமும்

(c)வேறு ஏதாவது வழிகளிலிருந்து அறக்கட்டளைக்குக் கிடைக்கும் பணம் அத்தனையும்.

2.மத்திய அரசின் அனுமதியுடன் போர்டு தனக்குக் கிடைத்த பணத்தை முதலீடு செய்யவோ வங்கியில் சேமிக்கவோ செய்யலாம்.

3. அறக்கட்டளையின் நிர்வாக மற்றும் பிற செலவுகளுக்காகவும், தனது

வேலைகளைச் செய்வதற்காகவும் பிரிவு 10 இல் கூறப்பட்டிருக்கும் பணிகளுக்காகவும் நிதியை எடுக்கலாம்.

23.

வரவு செலவு திட்டம் - ஒவ்வொரு நிதி ஆண்டிலும் குறிப்பிட்ட சமயத்தில் போர்டு, அடுத்த நிதி ஆண்டுக்கான நிதிஒதுக்கீட்டை விதிமுறைப்படி அறக்கட்டளையின் வரவுசெலவு கணக்கு விவகாரங்களுடன் தயார்செய்து மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும்.

24. கணக்கு மற்றும் தணிக்கை

(1)

போர்டு கணக்கு விவரங்களையும் பிற ஆவணங்களையும் சரியாக நிர்வகித்து வருவாய் மற்றும் செலவுக் கணக்குகள் உட்பட ஆண்டிறுதிக் கணக்கு அறிக்கையை மத்திய அரசின் வழிமுறைகள் படி தயாரிக்க வேண்டும். இந்த வழிமுறைகள் இந்தியாவின் சிஏஜி(கணக்குத் தணிக்கைக் குழு தலைவர்) யின் ஆலோசனைகளின்படி இருத்தல் வேண்டும்.

(2)

கணக்குத் தணிக்கைக் குழுவின் தலைவரின் விருப்பப்படி அறக்கட்டளையின் கணக்குகள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் தணிக்கை செய்யப்படலாம். இந்தக் கணக்குத் தணிக்கைக்கு ஆகும் செலவு அறக்கட்டளையால் கணக்குத் தணிக்கைக் குழுவின் தலைவருக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

(3)

கணக்குத் தணிக்கையைப் பொருத்தவரை கணக்குத் தணிக்கைக் குழு தலைவராக இருந்தாலும்/அவரால் நியமிக்கப்பட்டவராக இருந்தாலும் உரிமை, அதிகாரம் மற்றும் சலுகைகளைப் பொறுத்தவரை ஒன்றுதான்.

அரசுக் கணக்குகளைப் பார்ப்பதில் தொடர்பு கொண்டவராக கணக்குத் தணிக்கைக் குழு தலைவர் இருப்பதால் கணக்குப் பதிவேடுகளைக் கேட்டாலோ அது தொடர்பான வவுச்சர்களைக் கேட்டாலோ பிற ஆவணங்களைக் கேட்டாலோ அதை ஒப்படைக்க வேண்டியது அவசியமாகும். அறக்கட்டளையின் **எந்த** அலுவலகத்தை ஆய்வுசெய்ய வேண்டுமென்றாலும் அனுமதிப்பது அவசியம்.

(4)

கணக்குத் தணிக்கைத் தலைவர் அல்லது அவரது பிரதிநிதி, ஆய்வுசெய்து அளித்த சான்றிதழுடன், கணக்குத் தணிக்கை அறிக்கையையும் சேர்த்து ஆண்டுதோறும் மத்திய அரசுக்கு அனுப்பவேண்டும். அரசு அந்த ஆவணங்களை நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் முன்பும் சமர்ப்பிக்கும்.

25.

ஆண்டிறுதி அறிக்கை- ஆண்டிறுதி அறிக்கையை ஆண்டுமுடிவில் போர்டு தயாரிக்கலாம். முந்தைய ஆண்டில் நடந்த செயல்பாடுகள் பற்றி ய உண்மையான தகவல்களைக் கொண்ட அறிக்கையாக அது இருத்தல் வேண்டும். அதன் நகல்கள் மத்திய அரசுக்கும் அனுப்பப்பட வேண்டும். நாடாளுமன்றத்தின் இரு அவைகளுக்கு முன்பு அந்த அறிக்கை வைக்கப்படலாம்.

26. உத்தரவுகளின் சான்றளிப்பு – போர்டு நடைமுறைப்படுத்திய அனைத்து உத்தரவுகளும், முடிவுகளும் அறக்கட்டளையின் பெயரில் வழங்கப்பட்ட ஆவணங்களும் தலைவராலோ, அவர் நியமித்த தலைமைச் செயல் அதிகாரி அல்லது பிற அதிகாரியாலோ கையெழுத்திட்டு சான்றளிப்பு செய்யப்படுதல் வேண்டும்.

27. வருவாய் மற்றும் தகவல் - மத்திய அரசுக்கு, போர்டு தனது அறிக்கைகளையும், வருவாய் விவரங்களையும் பிற விவரங்களையும் தேவைக்கு ஏற்ப அனுப்ப வேண்டும்.

CHAPTER IX

அத்தியாயம் ix

MISCELLANEOUS

**இதர**

28.

வழிகாட்டுதல்களை வழங்குவதற்கு மத்திய அரசுக்கு இருக்கும் அதிகாரம்-

(1)

இந்தச் சட்டத்தின் அம்சங்களை விறுப்பு வெறுப்பின்றி அணுகாமல், போர்டு தனது அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை நிகழ்த்தும். கொள்கை குறித்த சந்தேகங்களை மத்திய அரசிடம் கேட்டு கொடுக்கப்படும் வழிமுறைகளைப் பின்பற்றுதல் அவ்வப்போது அவசியம்.

இந்த உப பிரிவின் கீழே அரசு கொடுத்திருக்கும் வழிமுறைகள் தொடர்பான நடைமுறைக் கருத்துகளை போர்டு சொல்வதற்கு வாய்ப்பும் அளிக்கப்படும்.

(2) கொள்கை அல்லது இதர சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு மத்திய அரசின் முடிவே இறுதியானது

29. போர்டின் அதிகாரத்தை ஒடுக்கும் மத்திய அரசின் அதிகாரம்-

(1)

பதிவுசெய்த அமைப்பின் புகாரின் பேரிலோ, இனி போர்டால் செயல்பட முடியாது என்ற நம்பிக்கையின் பெயரிலோ, போர்டு தனது கடமைகளைத் தொடர்ந்து செய்யத் தவறினாலோ, மத்திய அரசு ஒரு

அறிவிக்கையை போர்டுக்கு அனுப்பி ஏன் அதன் அதிகாரங்களை முடக்கக்கூடாது என்று கேட்கலாம்.

இந்த அறிவிக்கைக்கு முன்பு போர்டின் அதிகாரத்தை முடக்கும் எந்த உத்தரவையும் மத்திய அரசு இட்டிருக்கக் கூடாது என்பதே நிபந்தனை. அத்துடன் அந்த அறிவிக்கைக்கு, போர்டு தனது தரப்பு விளக்கத்தைக் கூற  போதுமான அவகாசமும் தரப்பட வேண்டும்.

(2)

எழுத்துப்பூர்வமாக போர்டு முடக்கப்படுவதற்கான காரணங்களை மத்திய அரசு பதிவு செய்து, அறிவிக்கையையும் வழங்கி அதை அரசிதழிலும் பதிவுசெய்தல் வேண்டும். அது ஆறு மாதங்களுக்கு மேலான முடக்கமாக இருத்தல் கூடாது.

இந்த முடக்கல்நிலை காலாவதியாகும் நிலையில், மத்திய அரசு மீண்டும் ஒரு போர்டை 3 ஆவது பிரிவின்படி மறுசீரமைக்க வேண்டும்.

(3)

இரண்டாவது உட்பிரிவின்படி அறிவிக்கை வெளியிட்டபின்,

(a) போர்டின் உறுப்பினர்கள், முடக்கல் நிலை அமலாகும் தேதியில் அவர்களது பதவிக்காலம் முடியவில்லையெனினும், உறுப்பினர்களைப் போல அலுவலகத்தை விட்டு காலிசெய்ய வேண்டும்;

b) இந்தச் சட்டத்தின் நடைமுறைப்படி அறக்கட்டளையின் சார்பாக அனைத்து அதிகாரங்களும் கடமைகளும் மத்திய அசு நியமிக்கும் நபர்களால் முடக்கல் காலத்தில் கையாளப்படும்.

(4)

உப பிரிவு 2 இன் கீழ் அறிவிக்கையில் தெரிவித்தபடி முடக்கல்நிலை

காலாவதியாகும் போது,

a) மத்திய அரசு முடக்கல் காலத்தை மேலும் தேவைப்படின் நீட்டிக்கலாம். ஆனால் இந்த முடக்கல் காலம் ஆறுமாதங்களுக்கு மேல் நீடிக்கக்கூடாது அல்லது

b) பிரிவு 3 (1961ல் 43) இன்படி புதிய போர்டு ஒன்றை அமைக்க வேண்டும்.

30.

வருமான வரியிலிருந்து விலக்கு- 1961 ஆம் ஆண்டில் அமலான வருமான வரிச் சட்டத்தின் படியோ, வரி தொடர்பான வேறு எந்தச் சட்டத்தின் கீழும் அறக்கட்டளைக்கு வரும் வருவாய், லாபங்களுக்கு வருமான வரியோ வேறு வரிகளோ கட்டவேண்டிய அவசியம் இல்லை.

31. நல் எண்ண அடிப்படையிலான நடவடிக்கைகளுக்குப் பாதுகாப்பு : மத்திய அரசு மீதோ, அறக்கட்டளையின் மீதோ, போர்டு உறுப்பினர் மீதோ அல்லது தலைமைச் செயல் அதிகாரி அல்லது அறக்கட்டளையின் ஊழியர்கள் மீதோ இச்சட்டத்தின் கீழ் நல்ல எண்ணத்தின் அடிப்படையில் ஒருவர் ஏற்படுத்தும் சேதத்திற்காக வழக்கு எதுவும் போட முடியாது.

விளக்கம்- நல்ல எண்ணம் என்ற குறிப்புக்கான அர்த்தம் இபிகோ(45,1860) ல் வரையறுக்கப்பட்டதே இந்தப் பிரிவின் தேவைக்கும் பொருந்தும்.

32.

தலைவர், உறுப்பினர்கள் மற்றும் அறக்கட்டளையின் அதிகாரிகள் அனைவரும் அரசுப்பணியாளர்கள்- அனைத்து உறுப்பினர்கள், தலைமைச் செயல் அதிகாரி, பிற அதிகாரிகள் மற்றும் அறக்கட்டளையின் ஊழியர்கள் நிகர்நிலை அந்தஸ்தில் இந்தச்

சட்டத்தின் அம்சங்களின்படி செயல்படலாம். அரசுப்பணியாளர் எனில் இபிகோ 21 ஆவது பிரிவின் அர்த்தம் பொருந்தும்.

33. பொறுப்பு வழங்குதல் – எழுத்து வாயிலான பொது அல்லது சிறப்பு உத்தரவு **மூலம்** தலைவருக்கு அல்லது அறக்கட்டளையின் உறுப்பினர் அல்லது அதிகாரிக்கு சில நிபந்தனைகள் மற்றும் வரைமுறைகளுடன்- தேவை எழும் நிலையில்- சில அதிகாரங்களை (35 ஆவது பிரிவின் கீழ் விதிமுறைகளை உருவாக்கும் அதிகாரம் தவிர) வழங்கலாம்.

34. விதிகளை உருவாக்கும் அதிகாரம் வழங்கல் –

(1)

மத்திய அரசு இச்சட்டத்தின் அம்சங்களை நடைமுறைப்படுத்த விதிமுறைகளை உருவாக்கி அரசிதழில் வெளியிடலாம்

(2) குறிப்பாக, விருப்புவெறுப்பின்றி அதிகாரத்தைச் செயல்படுத்தி கீழ்க்கண்டவைகளில் விதிமுறைகளை உருவாக்கலாம்

a) 3 ஆவது சட்டப்பிரிவின் உட்பிரிவு(4) அம்சம் b -ன்படி பதிவுபெற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளைத் தேர்ந்து எடுத்தல் தொடர்பான வழிமுறைகள்

b) தலைவர் மற்றும் உறுப்பினர்களின் சேவை நிபந்தனைகளை பிரிவு (4) இன் உட்பிரிவு (2) இன் கீழ் வரைமுறைப்படுத்தலாம்.

c) போர்டு கூட்டங்கள் தொடர்பான விதிகளை (4) ஆவது பிரிவின் கீழ் உள்ள உட்பிரிவு (6) இன் கீழ் வரைமுறைப்படுத்தலாம்;

d) தலைமைச் செயல் அதிகாரியின் அதிகாரங்களும், கடமைகளும் பிரிவு 8 இன்கீழ் உட்பிரிவு (1) இன் அடிப்படையில் வரையறுக்கப்படலாம்;

e) 14 ஆவது பிரிவின்கீழ் உட்பிரிவு(2) இன் அடிப்படையில்பதிவுபெற்ற அமைப்பின் மூலம் விண்ணப்பிக்கப்படும் பாதுகாவலர் விண்ணப்ப வடிவம் தொடர்பானவை

f) பிரிவு 17 இன் அடிப்படையில் பாதுகாவலர் நீக்கம் தொடர்பான வழிமுறைகள்

g) 23 ஆவது பிரிவின் கீழ் மத்திய அரசுக்கு அனுப்பப்பட வேண்டிய நிதிநிலை அறிக்கையின் வடிவம் மற்றும் கால அவகாசம் தொடர்பான விதிமுறைகள்.

h) பிரிவு 24, உட்பிரிவு (1) இன்கீழ் பராமரிக்கப்பட வேண்டிய ஆண்டு கணக்கு அறிக்கையின் வடிவம் தொடர்பான விதிமுறைகள்.

i) 25 ஆவது பிரிவின் கீழ் அனுப்பப்பட வேண்டிய ஆண்டறிக்கைகளின் வடிவம் மற்றும் கால அவகாசம் தொடர்பான விதிமுறைகள்

j) தேவைப்படும் எந்த ஒரு விசயம் தொடர்பானவை

35.

விதிமுறைகளை உருவாக்குவதற்கான அதிகாரம்-

(1)

மத்திய அரசிடம் முன் அனுமதி வாங்கி , அதனை அரசிதழ் மூலம் அறிவித்து, பிறகு விதிமுறைகளை இச்சட்டத்தின் கீழ் உருவாக்கி இச்சட்டத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு செயல்படுத்தலாம்.

(2)

அதிகாரத்தை விருப்பு வெறுப்பின்றி பயன்படுத்துவது அவசியம். விதிமுறைகள் அனைத்து அம்சங்களுக்குமோ அல்லது கீழ்க்கண்ட

விஷயங்களுக்குமோ உருவாக்கப்படலாம்: -

a) பிரிவு 3 இன் கீழ் உட்பிரிவு(5) இன் அடிப்படையில் ஒரு நபர் சம்பந்தப்படும் விதம் மற்றும் காரணம்
b) பிரிவு 4, உட்பிரிவு (6) இன் கீழ் போர்டு கூட்டம் எந்த இடத்தில், எந்த நேரத்தில் நடைபெறலாம்;
c) 8 ஆம் பிரிவின்கீழ் உட்பிரிவு (3) இன்படி ,தலைமைச் செயல் அதிகாரி, பிற அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் சேவைக்கான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள்,;
d) பிரிவு 12 இன்கீழ் (2) ஆவது உட்பிரிவின் படி பதிவுசெய்வதற்கான விண்ணப்பத்தின் வடிவம் , விதம் மற்றும் உட்பிரிவு 19 இன் கீழ் விண்ணப்பத்தில் கொடுக்க வேண்டிய விவரங்கள் தொடர்பானவை
e) பிரிவு 14 இன்கீழ் உட்பிரிவு(4) இல் குறிப்பிட்டுள்ளபடி உள்ளூர் கமிட்டி பாதுகாவலர் விண்ணப்பத்தைப் பெற்று ஆராய்ந்து முடிவெடுக்கும் விதம் தொடர்பானவை
f) பிரிவு 14 இன்கீழ் உட்பிரிவு (5) இல் குறிப்பிட்டுள்ளபடி உள்ளூர் கமிட்டி பிறப்பிக்கும் உத்தரவுகள் மற்றும் விண்ணப்ப விவரங்கள்
g) பிரிவு 19 இன் கீழ் பதிவுபெற்ற அமைப்புகளின் முந்தைய நிதி நிலையை மதிப்பிடுதல், பதிவுபெற்ற அமைப்புகளின் செயல்பாடுகளைக் கண்காணித்து மதிப்பிடுதல், வழிகாட்டுதல் நெறிகளை வரையறுத்தல் தொடர்பானவை

36. **பாராளுமன்றத்தில் சமர்பிக்க வேண்டிய விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள்**

விதிமுறைகளும் ஒழுங்குகளும் தயாரிக்கப்பட்ட நிலையில் காலம் தாழ்த்தாமல் நாடாளுமன்றத்தின் இரு அவைகளுக்கும் முன்பு வைக்கப்பட வேண்டும். விதிமுறைகளை உருவாக்கிய பிறகு வரும் கூட்டத்தொடரிலோ அடுத்தடுத்த தொடர்களிலோ வைக்கப்பட வேண்டியது அவசியம். இந்த விதிமுறைகளில் ஏதாவது மாற்றம் தேவைப்படின் அதற்கு இரு அவைகளும் சம்மதம் தெரிவிக்க வேண்டும். குறிப்பிட்ட விதிகள் செயல்படுத்தக்கூடாது என்று இரு அவைகளும் ஏற்காமலும் இருக்கலாம். இருப்பினும் விதிமுறைகளில் எந்த மாற்றம் செய்தாலும் அதை விருப்பு வெறுப்பின்றி விதிமுறைகளின் படி செய்யப்பட வேண்டியது அவசியம்.